24 அக்டோபர் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 30 ஆம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்: **ஆழத்தில் போடுங்கள்**

# இரக்கம் என்பது மனிதம்

'அவரைக் கூப்பிடுங்கள்'. எரிகோவில் பார்வையற்ற பிச்சைக்காரர் பர்த்திமேயுவின் குரலுக்கு இயேசுவின் பதில் இது. எருசலமிற்குச் செல்லும் தமது பயணத்தின் கடைசி கட்டத்தில் இயேசு நடந்து போகிறார். ஏதோ இயேசுவிற்காக காத்திருப்பது போல், அந்த பார்வையற்றவரின் குரல் கேட்டு இயேசு நிற்கிறார்.



'உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்' என இயேசு பர்த்திமேயுவை பார்த்துக் கேட்கிறார். அவரும் தம் மேலுடையை எறிந்து விட்டுச் செல்கிறார். "ரபூனி, நான் மீண்டும் பார்வை பெறவேண்டும்" என இயேசுவிடம் கூறுகிறார். இயேசு அவரிடம், "நீர் போகலாம்; உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று" என்றார். இந்த சம்பவத்தை மனதில் கொண்டால், சுற்றியிருந்த மக்கள் கூட்டம் மறக்கப்பட்டு விட்டது. மனதில் நிற்பதெல்லாம் பர்த்திமேயும் இயேசுவும் மட்டுமே. அந்த பார்வையற்ற மனிதர் தமது அவலநிலையை அறிவார், ஆண்டவரின் இரக்கத்தை வேண்டினார், குணமளிக்கும் அருள் கிடைத்தது.

'நாம் வாழும் உலகமும் அதன் மீட்புக்கான தேவைகளும் கிறிஸ்துவுக்கு அந்நியமல்ல, அதனால் அவரது பணியில் தீவிரமாக ஈடுபாடு காட்ட வேண்டுமென நம்மை அழைக்கிறது' என்று திருத்தந்தை பிரான்சிஸ் தமது மறைப்பரப்புச் செய்தியில் கூறியிருக்கிறார். 'நீங்கள் போய்ச் சாலையோரங்களில் காணும் எல்லாரையும்... அழைத்து வாருங்கள்' (மத்.22:9). எரேமியா 31:9 இதனை உறுதிப்படுத்துகிறது, 'மண்ணுலகின் கடை எல்லைகளினின்று அவர்களைக் கூட்டிச் சேர்ப்பேன். அவர்களுள் பார்வையற்றோரும் காலூனமுற்றோரும் பேறுகாலப் பெண்டிரும் அடங்குவர்'. இயேசுவின் நலமளிக்கும் அன்பு ஏழைகள் மீதான கடவுளின் தனிப்பட்ட அன்பில் என்றும் இடம் பெற்றிருக்கிறது.

'அஸ்தர ஸெநெகா' தடுப்பூசியைக் கண்டுபிடித்த சாரா கில்பெட்டும் அவரது குழுவினரும் லட்சக்கணக்கான டாலரைச் சம்பாதிக்க முடியும் என்பதை எண்ணவில்லை மாறாக லட்சக்கணக்கான உயிரைக் காப்பாற்ற முடியும் என்பதை எண்ணினார்கள்.

உதவி தேவைப்படுவோர்க்கு மனமுவந்து உதவி செய்ய முன்வரும் பற்பல தொண்டூழிய இயக்கங்கள், தொழில்நிறுவனங்கள், குடும்பங்கள், தனிநபர்களின் தர்ம செயல்களைக் காணும் போது நம் உள்ளம் நெகிழ்கிறது. சில மாதங்களுக்கு முன்பு, மருத்துவமனை சாதனங்களை நன்கொடையாக வழங்கும் 'ச்சு ச்சி' அறக்கட்டளைக்குக் கத்தோலிக்கத் திருஅவை பெரும்தொகையை நன்கொடை அளித்து ஒருமைப்பாட்டைக் காட்டியது. அதிச மற்றும் பங்கு பணிக்குழுக்கள் மேற்கொள்ளும் பல உதவித்திட்டங்களை நமது ஆலய வலைத்தளங்கள் காண்பது மனதிற்கு நிறைவைத் தருகிறது.

மேற்கூறப்பட்ட அனைத்தும் மனிதத்தின் தன்னலமற்ற இரக்கச் செயலைக் காட்டுகிறது. ஆயினும் இந்த வெற்றிவாகையைக் கண்டு தன்னிறைவுக் கொண்டு, நாம் வாளாவிருக்கக்கூடாது. 'இந்த பரிவிரக்க அன்பிலிருந்து யாரும் அந்நியரல்ல, அந்நியமாக கருதக்கூடாது' (திருத்தந்தை பிரான்சிஸ் எ 2021 மறைப்பரப்புச் செய்தி).

பர்த்திமேயு போல் நற்செய்திக்காக (பாதுகாப்பு) மேலுடையை எறிந்துவிட நாமும் தயாராக இருப்போம் ✠

மனனம் செய்ய இந்த வார வசனம்:

"ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல் புரிந்துள்ளார்; அதனால் நாம் பெருமகிழ்ச்சியுறுகின்றோம்."

(திபா. 126, 3)

**இன்றைய வாசகங்கள்:**

எரே. 31, 7-9;
திபா. 125; 1-6;
எபி. 5, 1-6;
மாற்கு 10, 46-52.

INTERNAL CIRCULATION ONLY
BUL 43/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org